1979 மார்ச் 30]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கடந்த நவம்பர் மாதம்தான் அதற்குரிய அந்தத்தொகையை அது சம்பந்தப்பட்ட இயக்குநர்களுக்கு வழங்க ஆணையிட்டுள்ளோம். இனிமேல் தான் இதனால் பயனடைந்தவர்களுடைய எண்ணிக்கை சரியாகத் தெரியும். வாய்ப்பு வரும்போது அவசியம் தெரிவிக்கிறேன்.

பேருந்துப் போக்குவரத்து குறித்த குழு.

*வினா எண். 570—திரு. எஸ். ஜே. இராமசாமி, திரு. என் கிட்டப்பா, திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1976ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பேருந்துப் போக்குவரத்து பற்றி ஆய்வு செய்வதற்கென பட்டாபிராமன் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டதா ?

(ஆ) அக்குழு தனது அறிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் நகல் ஒன்று பேரவைமுன் வைக்கப்படுமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) கூடிய விரைவில் அந்த அறிக்கை பேரவை முன் வைக்கப்படும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, இந்த பட்டாபிராமன் தலைமையிலான குழு தனது பரிந்துரையை எப்போது அளித்தது? அந்தப் பரிந்துரையினுடைய உயரிய நோக்கத்தை அமைச்சரின் செயலர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டபடி அதனுடைய நோக்கம் சாலைப் போக்குவரத்துக் கழகங்கள், மற்றும் பொறியியற் கூடங்கள் ஆகியவைகள் செயல்படுகின்றதை ஆராய்ந்து, இதிலே சில

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முன்னேற்றங்களைச் செய்ய வேண்டுமென்பதாகும். அரசு ஆணை எண் 604-ல் நாள் 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26ஆம் நாளன்று அரசு இதற்கு உதவி செய்திருக்கிறது.

[முற்பகல் 9–50]

திரு. ஜே. ஜேம்ஸ் : பட்டாபிராமன் குழு அறிக்கை எப்போது அரசுக்குத் தரப்பட்டது? இதுவரை அந்த அறிக்கையை அவையில் வைக்காததன் காரணம் என்ன? எந்தெந்த அம்சங்களை அரசு நிறைவேற்றியுள்ளது?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பட்டாபிராமன் குழு தனது அறிக்கையை 1977ஆம்ஆண்டு ஜூன் திங்கள் 7ஆம் நாளன்று அரசுக்குக்கொடுத்தது. அந்த அறிக்கையில் 236 பரிந்துரைகள் கொண்ட 11 படலங்கள் உள்ளன. இப்பரிந்துரைகள் அரசின் ஆய்விலுள்ளன. 236 பரிந்துரைகளில் 172 பரிந்துரைகள் மீது அரசு முடிவெடுத்துள்ளது. மற்ற 64 பரிந்துரைகள் ஆய்வில் இருக்கின்றன.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தக் குழு அறிக்கையிலே பிரைவேட் பஸ் ஆப்பரேட்டர்ஸ் பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது? உச்சவரம்பாக எவ்வளவு பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறதா? அது எவ்வளவு?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : இதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : இந்த அறிக்கை அரசுக்குக் கிடைத்து ஏறத்தாழ இரண்டாண்டுகள் ஆகியும் சட்டப் பேரவையில் வைக்கப்படவில்லை. இந்தக் கூட்டத் தொடரிலேயே அந்த அறிக்கையை உறுப்பினர்களுக்குக் கொடுக்க வழி வகை செய்யப்படுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : இந்தப் பரிந்துரைகளின் பேரில் ஆய்வு செய்து, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் ஆணை பிறப்பிப்பதற்காக ஆய்வில் இருந்து கொண்டிருக்கிறது. பட்டாபிராமன் குழுவானது அமைச்சரவையின் ஒப்புதல் பெற்று அமைக்கப்பட்டதால் ஆணைகள் பிறப்பிக்க அமைச்சரவையின் ஒப்புதல் பெறவேண்டும். அமைச்சரவையின் ஒப்புதல் பெற்று சட்டப் பேரவையில் வைக்க வேண்டும். அமைச்சரவையின் கூட்டத்திற்கான குறிப்பு தனியே அனுப்பப்பட்டிருக்கிறது. அமைச்சரவை ஒப்புதல் அளித்தவுடன் அறிக்கை சட்டப்பேரவையில் வைக்கப்படும்.